BIF Beratungsstelle für Frauen
gegen Gewalt in Ehe und Partnerschaft

Tel. 044 278 99 99
bif-frauenberatung.ch

TA*

# பிரிந்து வாழ்தல் மற்றும் மணமுறிவு குறித்து பெண்களுக்கான தகவலகள்

திருமண உறவில்

பதிவு செய்யப்பட்ட, திருமணமல்லாத ஒரு உறவில்

பதிவு செய்யப்படாத, திருமணமல்லாத ஒரு உறவில்

* இந்த ஆவணங்களை மேலும் 16 மொழிகளில் பெற்றுக் கொள்ளலாம்

„இவ்வன்முறை நிறுத்தப்பட்டு எனக்கு மரியாதை அளிக்கப்பட வேண்டும்“

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| நான் பிரிவிற்கான முயற்சி எடுக்க விரும்புகிறேன். நான் எப்படிச் செயல்பட வேண்டும்? | 3 |
| இம்மணமுறிவு பூர்வாங்க வழக்கின் செலவு என்ன? இந்த பணத்தை வழக்கறிஞருக்கு செலுத்துவது யார்? | 3 |
| நடத்தப்படும் இம்மணமுறிவு பூர்வாங்க வழக்கில் எதனை நான் சட்டத்தின் மூலம் நிர்ணயம் செய்ய முடியும்? | 3 |
| இப்பிரிவைக் குறித்து அவர் அறிந்தால் பிரச்சனை இன்னும் அதிகரிக்கும் என பயப்படுகிறேன்! | 3 |
| பிரிதல் உடனடியாக நடக்க வேண்டுமானால் | 3 |
| யார் வீட்டை பெற்றுக்கொள்ளலாம்? | 4 |
| யாரிடம் எனது பிள்ளைகள் வாழப்போகிறார்கள்? | 4 |
| எவ்வளவு தடவை எனது கணவர் பிள்ளைகளைப் பராமரிக்கலாம்? | 4 |
| எதை வைத்து நாங்கள் வாழ்க்கையை நடத்தமுடியும்? | 4 |
| இப்பிரிவு வாயிலாக எனது குடியுரிமை பாதிக்கப்படுமா? | 4 |
| மணமுறிவு பூர்வாங்கப் பேச்சு வார்த்தையில் என்ன நடக்கலாம்? | 5 |
| மணமுறிவு பூர்வாங்க வழக்கின் தீர்ப்பிற்கு எதிராக எப்படி செயல்படலாம்? | 5 |
| இவற்றை விட மணமுறிவினை உடனே நாடுவது நலமானதா? | 5 |
| நான் மணம் செய்து கொள்ள நிர்பந்திக்கப் பட்டேன். நான் என்ன செய்வது? | 5 |
| பதிவு செய்யப்பட்ட, திருமணமல்லாத ஒரு உறவினை எவ்வாறு கலைக்க இயலும்? | 5 |
| நாங்கள் பதிவு செய்யப்படாத, திருமணமல்லாத ஒரு உறவினில் வாழ்கின்றோம். இதிலிருந்து பிரிய விரும்புகின்றோம். | 6 |
| முக்கியமான முகவரிகள் | 6 |
| பதிப்பு | 7 |

## நான் பிரிவிற்கான முயற்சி எடுக்க விரும்புகிறேன். நான் எப்படிச் செயல்பட வேண்டும்?

நீங்கள் வசிக்கும் மாவட்டத்திலுள்ள (www.gerichte-zh.ch) பொறுப்பான பிராந்திய நீதிமன்றத்தில் உங்கள் மணமுறிவு பூர்வாங்க வழக்கை நடைமுறைக்கு கொண்டுவரலாம் மற்றும் பிரிந்து வாழ விண்ணப்பம் செய்யலாம் (படிவம்: மணமுறிவு பூர்வாங்க வழக்கு). இவ்வழக்கை நீங்களோ அல்லது ஒரு வழக்கறிஞர் மூலமாகவோ தொடங்கலாம். நீங்கள் முதன்முறை மாவட்ட நீதிமன்றத்திற்கு அல்லது உங்கள் வழக்கறிஞரிடம் செல்லும் போது கீழ்வரும் ஆவணங்களை எடுத்துச் செல்லவும்:

- உங்கள் நிதி நிலைமைக்கான ஆவணங்கள் (கடந்த இரண்டு ஆண்டு கால வருமானவரித் தகவல் ஆதாரத்துடன் அவற்றின் கணக்கு விபரம், 3-6 மாத ஊதியப் பட்டியல்கள், தொடர்ந்து வந்த செலவினங்களின் பற்றுச் சீட்டுகள், 3-6 மாத வங்கிக் கணக்கு அறிக்கைகள்.
- திருமணத்தின் ஆரம்ப காலங்களிலிருந்து இன்று வரையுள்ள குறிப்புகள் (முக்கிய தேதிகளும் சம்பவங்களும், உதாரணமாக கணவரின் வன்முறைச் செயல்கள், மருத்துவ அறிக்கை, குற்றவியல் விசாரணைக்கான ஆவணங்கள், வன்முறையினின்று பாதுகாப்பிற்கான நடவடிக்கை)

## இம்மணமுறிவு பூர்வாங்க வழக்கின் செலவு என்ன? இந்த பணத்தை வழக்கறிஞருக்கு செலுத்துவது யார்?

உங்களுக்கு பணம் போதாமையிருந்தால், நீங்கள் அல்லது உங்கள் வழக்கறிஞர் இலவசமாக வழக்கை நடத்துவதற்கும் அத்துடன் வழக்கை நடத்தக்கூடிய ஒரு வழக்கறிஞருக்காகவும் ஒரு மனு அளிக்கலாம் (மனு). இம்மனு அனுமதிக்கப்பட்டால் நீதிமன்றச் செலவும், வழக்கறிஞருக்குரிய செலவும் தற்காலிகமாக கட்டப்படும். சில காலத்தின் பின் உங்களிடம் பண வசதி இருந்தால், நீதி மன்றத்தால் 10 வருடத்திற்குள் அப்பணத்தொகை உங்களிடத்திலிருந்து திரும்ப கேட்க முடியும் (இலவச சட்ட உதவி குறித்த தகவல் தாள்). வழக்கறிஞருக்குரிய கட்டணத்தை உங்களால் கட்ட முடிந்தால், நீங்கள் முதற்கண் ஒரு ஆலோசனை மையத்தில் அல்லது வழக்கறிஞரிடம் மணமுறிவு பூர்வாங்க வழக்கை நடத்தும் செலவை அறிந்துகொள்ளலாம்.

## நடத்தப்படும் இம்மணமுறிவு பூர்வாங்க வழக்கில் எதனை நான் சட்டத்தின மூலம் நிர்ணயம் செய்ய முடியும்?

மணமுறிவு பூர்வாங்க வழக்கில் பெண் நீதிபதி பின்வரும் விடயங்களை நிர்ணயம் செய்வார்:

- வீடு ஒதுக்கீடு
- பிள்ளையின் பாதுகாவலர்
- பிள்ளையின் பாதுகாவலர் அல்லாத பெற்றோரின் (தாய் அல்லது தகப்பன்) பராமரிப்பு உரிமை
- பிள்ளைக்கான பராமரிப்புப்பணம்
- பாகப்பிரிவினை

## இப்பிரிவைக் குறித்து அவர் அறிந்தால் பிரச்சனை இன்னும் அதிகரிக்கும என பயப்படுகிறேன்!

உங்கள் கணவர் உங்களிடமோ, உங்கள் பிள்ளைகளிடமோ வன்முறையை பிரயோகித்திருந்தால் அல்லது வன்முறையை பிரயோகிப்பதாக அச்சுறுத்தியிருந்தால், காவலர் (Polizei) மூலம் கடுமையான சூழ்நிலையில் உங்கள் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை மேற்க்கொள்ள முடியும் ( வன்முறை பாதுகாப்பு சட்டக் கையேடு ‘). அவை உங்கள் கணவரை வீட்டிலிருந்து வெளியேற்றுவது, உங்கள் வீட்டின் அருகே ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்திற்குள் அவர் நுழைய தடை, உங்களோடும் உங்கள் பிள்ளைகளோடும் 14 நாட்களுக்கு தொடர்பு கொள்ளத் தடை போன்றவைகளாக இருக்கலாம். நீங்கள் 8 நாட்களுக்குள் இப்பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்கப் பண்ணலாம் (www.ist.zh.ch). பாதிக்கப்பட்டோருக்கான ஆலோசனை நிலையங்களில் இலவசமாகவும் இரகசியமாகவும் உங்களுக்கு மணமுறிவு வழக்கின்போது ஆலோசனைகளை கொடுத்து உங்களுக்கு உதவி செய்யப்படும். பொதுவாக இப்படிப்பட்ட சட்டரீதியான பிரிவை நிறைவேற்ற 3 மாதங்கள் போதும். இம்மூன்று மாதங்கள் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளின் பின்னும் உங்கள் கணவர் உங்களை அச்சுறுத்துவார் என்று அஞ்சினால், நீங்கள் மாவட்ட நீதிமன்றத்தில் குறிப்பாக தொடர்பு கொள்ளல் தடுக்கப்படல் (Persönlichkeitsschutz nach Zivilrecht ZGB 28b). போன்ற ஒரு விண்ணப்பம் சமர்ப்பிக்கலாம். இதை பிரிந்திருத்தலுக்கான விண்ணப்பத்தோடு ஒரே நேரத்தில் சமர்ப்பிக்கலாம். இது குறித்து எங்களிடம் அல்லது உங்கள் வழக்கறிஞரிடம் விசாரிக்கலாம். உங்கள் கணவர் இத்தொடர்பு கொள்ளல் தடுக்கப்படல் சட்டங்களை மீறி நடக்கலாம் என்று அஞ்சினால், பெண்களுக்கான வீடுகள் (Frauenhäuser) உண்டு, அவை முழுமையான பாதுகாப்பை கொடுக்கின்றன (www.frauenhaus.ch).

## பிரிதல் உடனடியாக நடக்க வேண்டுமானால்

நீங்கள் விதிவிலக்காக மணமுறிவு வழக்கிற்கு முன் தற்காலிகமான சட்ட நடவடிக்கைகளை எடுக்கக் கேட்டுக் கொள்ளலாம். அதற்கு நீங்கள் வன்முறைச் செயல்களையும், மணமுறிவு விரைவில் நடப்பதற்கான அவசியத்தையும் இவ்விண்ணப்பத்தில் நிரூபிக்க வேண்டும். நீதிமன்றம் பின்னர் தற்காலிமாக – ஆனால் உடனடியாக – மணமுறிவு பூர்வாங்க வழக்கிலுள்ள அதே சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியும். இச்சட்ட நடவடிக்கைக்கு முன்நிபந்தனை அதிகம். இந்நடவடிக்கையினை எடுக்க நீங்கள் ஆயத்தமாய் இருந்தால் பாதிக்கப்பட்டோருக்கான ஆலோசனை

நிலையத்தை அல்லது ஒரு வழக்கறிஞரை தொடர்பு கொள்ளவும்.

## யார் வீட்டை பெற்றுக்கொள்ளலாம்?

பொதுவாக அதிகம் தேவையுள்ள நபர் – அதாவது பிள்ளைகளைப் பிரதானமாக பராமரிக்கின்ற பெற்றோர் (தாய் அல்லது தகப்பன்). நீங்கள் இதுவரை வாழ்ந்த வீட்டில் தொடர்ந்து இருக்க விரும்பினால் பின்வரும் விடயங்களை கவனிக்கவும்:

- துணைவர் (Partner) வெளியேறும் தேதி (சில நாட்களிருந்து 2 மாதம் வரை). உங்கள் கணவர் வீட்டைவிட்டு வெளியேறமாட்டார் என்று உங்களுக்கு தெரியவந்தால், அவரை வெளியேற்றுவதற்கான அதிகாரத்தை சட்டபூர்வமான பிரதிநிதி (Stadtammanamt) மூலம் பெறலாம்.
- கணவர் உங்கள் சம்மதமின்றி வீட்டிற்குள் நுழையாதபடி வீட்டுத் திறவுகோல்களை முழுமையாக திருப்பி ஒப்படைத்தல். நீங்கள் முழுமையாக திறவுகோல்களைப் பெற்றுவிட்டேனா என்று சந்தேகப்பட்டு, வன்முறைச் செயலுக்கு பயந்தால் வீட்டுத் திறவுகோல்களை மாற்றிவிடவும்.

யாரிடம் எனது பிள்ளைகள் வாழப்போகிறார்கள்? இதுவரை பிள்ளகளைப் பெரும்பாலும் பராமரித்த மேலும் இன்னும் தொடர்ந்து இதனை உத்தரவாதமாக செய்யக்கூடிய பெற்றோர் (தாய் அல்லது தந்தை). நீதிபதி தானாகவே யாரிடம் பிள்ளைகள் திறமையாக பராமரிக்கப்படுவர் (பிள்ளையின் நன்மை) என பரிசோதிப்பார். சகோதரர்கள் வழக்கமாக ஒன்றாகவே இருப்பார்கள். 6 வயதுக்கு மேற்ப்பட்ட பிள்ளைகளை வழக்கின் போது விசாரிக்கக்கூடும்.

## எவ்வளவு தடவை எனது கணவர் பிள்ளைகளைப் பராமரிக்கலாம்?

பிள்ளைகளின் பராமரிப்புப் பொறுப்பு அளிக்கப்படாத பெற்றொர் பிள்ளைகளோடு தொடர்பு கொள்ளலாம். நீங்கள் உங்கள் கணவருடன் ஒரு உடன்பாடு செய்து அதனை நீதிபதி மூலம் அனுமதிக்கலாம். நீங்களும் உங்கள் கணவரும் இவ்விடயத்தில் ஒரு உடன்பாட்டிற்கு வர இயலவில்லையெனில், நீதிபதி பின்வரும் முடிவுகளை எடுப்பார்: பாலர்வகுப்பு பிள்ளைகளுக்கு: மாதத்தில் இரண்டு சனிக்கிழமைகள் அல்லது ஞாயிற்றுக்கிழமைகள். பள்ளிக்குழந்தைகளுக்கு: மாதத்தில் இரண்டு வார இறுதிகள் (வெள்ளி, சனி, ஞாயிறு), இத்துடன் இரண்டு விடுமுறை வாரங்கள். நீங்கள் பிள்ளைகளை குறித்த நேரத்தில் கொடுக்க ஒரு ஒப்பந்தத்தை எடுங்கள் இத்தோடு விடுமுறைகள் உ. ம். ஈஸ்டர், பெந்தெகொஸ்து, கிறிஸ்துமஸ் போன்ற நாட்களுக்கு ஒரு உடன்பாட்டிற்கு வரவும்.

உங்கள் கணவர் பிள்ளைகளை அச்சுறுத்தி அல்லது அடித்திருந்து, அல்லது பிள்ளைகளைக் கொடுக்கும் போது நிகழும் வன்முறைச் செயல்களால் பிரச்சனையை அதிகரித்தால், நீங்கள் பார்வையிடும் உரிமையை அல்லது பிள்ளைகளை பார்வையிட உதவியாக ஒரு பார்வையாளரை கேட்டுப்பெறலாம். பிள்ளைகளுக்கு பெரும் ஆபத்தான நிலை ஏற்பட்டால் மட்டுமே பார்வையிடும் உரிமை முழுமையாக நீக்கப்படும்.

## எதை வைத்து நாங்கள் வாழ்க்கையை நடத்தமுடியும்?

சட்டபூர்வமாய் தாபரிப்பு பணம் குறித்த தீர்வு எடுக்கப்பட சில வாரங்கள் அல்லது மாதங்கள் தேவைப்படலாம்.முன்னெச்சரிக்கையாக சமூகப் பாதுகாப்பு மையத்திற்குச் சென்று பதிவு செய்யுங்கள். இத்தேசத்தின நிதி ஆதரவு பெற்றுக் கொள்ள உங்களுக்கு உரிமையுண்டு.

உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் பொதுவான வங்கிக் கணக்கு அல்லது கடன் அட்டை உண்டானால்:

- உங்களிடம் போதிய சேமிப்பு இல்லாமலிருந்து வங்கி கணக்கு, கடன் அட்டை கணவரின் பெயரில் இருந்தால் உடனடியாக வங்கியிலிருந்து மூன்று மாதத்திற்க்கான பணத்தை எடுத்து கொள்ளுங்கள்
- வங்கி கணக்கு, கடன் அட்டை உங்களின் பெயரில் இருந்தால் உடனடியாக கணவரின் உரிமத்தை தடை செய்யவும்.

மணமுறிவு பூர்வாங்க வழக்கில் இரு தரப்பினரின் தேவைகள் கணக்கிடப்பட்டு அவர்களின் வருமானங்களிலிருந்து கழிக்கப்படும். இதனடாக உங்களுக்கும், பிள்ளைகளுக்கும் தாபரிப்பு பணம் கணக்கிடப்படடும். உங்கள் சம்பளம் மற்றும் தாபரிப்பு பணம் இவை இரண்டிற்கும் அதிகமாக உங்கள் செலவு இருந்தால் சமூக பாதுகாப்பு மையத்திற்குச் செல்லுங்கள். சில சமயத்தில் வேலையற்றோரின் உதவிப்பணம் (Arbeitslosentaggeld) பெற நீங்கள் உரிமையுள்ளவராய் இருக்கலாம்.

மணமுறிவு பூர்வாங்க வழக்கின் போது அரசிடமிருந்து பிள்ளைகள் பராமரிப்பிற்காக ஒவ்வொரு பிள்ளைக்கும் நிர்ணயிக்கப்பட்டத் தொகையான CHF 940.– அளிக்கப்படும். எனினும் பெண்களுக்குரிய தாபரிப்பு பணத்தைக் குறித்த விவரம் எதுவும் இந்தத் தீர்ப்பில் இல்லை. நீங்கள் வசிக்கும் உள்ளூராட்சியில் (Gemeinde) உள்ள கடன் சேகரிப்பு நிறுவனம் உங்களின் மனுவின்பேரில் தாபரிப்பு பணத்தைக் கொடுக்க வேண்டிய நபரிடமிருந்து பெற்றுத் தரும்.

## இப்பிரிவு வாயிலாக எனது குடியுரிமை பாதிக்கப்படுமா?

பெரும்பாலும் சுவிச்சர்லாந்தின் வாழிட அனுமதி கணவர் மனைவி சேர்ந்து வாழ்வதோடு பிணைக்கப்பட்டிருக்கிறது (Aufenthaltsstatus B). நீங்கள் ஐரோப்பிய ஒன்றியக் குடியுரிமை உள்ளவர் எனில் உங்களுக்கு சுவிச்சர்லாந்தில் தொடர்ந்துத் தங்க அனுமதி கிடைக்கும் வாய்ப்புகள் அதிகம். ஐரோப்பிய ஒன்றியக் குடியுரிமையற்றவர்கள் திருமணமான பின் சுவிச்சர்லாந்தில் 3 வருடங்கள் கழித்திருந்து, சமூகத்தில் வெற்றிகரமாக ஒருங்கிணைந்திருந்தால், அவர்களுக்கு மணமுறிவின் பின் சுவிச்சர்லாந்தில் தொடர்ந்துத் தங்க அனுமதி கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. ஆனால்

நீங்கள் இத்தேச வாழிட அனுமதியை நீட்டிக்க முக்கிய தனிப்பட்ட காரணங்களை காண்பிக்கலாம். குறிப்பாக திருமண வாழ்க்கையில் வன்முறைச் செயலால் பாதிக்கப்பட்டிருத்தல், அல்லது உங்கள் தாய் நாட்டில் சமூக ஒருங்கிணைப்பு ஆபத்தாக தோன்றுதல் போன்ற காரணங்கள் இதில் அடக்கம். நீங்கள் இதற்குச் சாட்சியாக மருத்துவ அறிக்கைகள், ஆலோசனை மையத்திலிருந்து அறிக்கைகள் அல்லது காவலர் (Polizei) மூலம் ஆணைகள் போன்றவற்றைக் கவனமாக வைத்திருக்கவும். உங்கள் வாழிட அனுமதி நிமித்தமாக வீட்டில் வன்முறைச் செயல்களை ஏற்றுக்கொள்ள வேண்டாம். இது குறித்து நாங்கள் உங்களுக்கு இலவசமாகவும் ரகசியமாகவும் ஆலோசனைகள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

## மணமுறிவு பூர்வாங்கப் பேச்சு வார்த்தையில் என்ன நடக்கலாம்?

ஆலோசனை மையத்தில், வழக்கறிஞரிடம் அல்லது நீதிமன்றத்தில் மணமுறிவு பூர்வாங்கப் பேச்சு வார்த்தை குறித்த தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.
நீங்கள் வழக்கறிஞரின்றி வழக்கைத் தொடங்கியிருந்தால் பின்வரும் விடயங்களை மிகவும் கவனிக்கவும்:

- உங்களுக்கு சந்தேகமாக இருந்தால் எந்த உடன்பாட்டிலும் கையொப்பம் இடவேண்டாம்!
- கையொப்பம் இட விரும்பினால் முக்கியமாக „10 நாட்களுக்குள் இந்த உடன்பாட்டினை மறுக்கும் உரிமை“ (Widerrufsvorbehalt) எனும் உட்கூறு உடைய உடன்பாட்டில் மட்டுமே கையொப்பம் இடுங்கள். ஒரு வழக்கறிஞர் வாயிலாக இந்த உடன்பாட்டினை ஆராய்ந்து, தேவைப்பட்டால் குறிப்பிட்ட கெடுவிற்குள் அதை ரத்து செய்யுங்கள்.

மணமுறிவு பூர்வாங்கப் பேச்சு வார்த்தைக்கு பிள்ளைகளை எடுத்துச் செல்ல முடியாது. இதற்காக அரை நாளை ஒதுக்குங்கள். பேச்சு வார்த்தை நீடித்தாலும் பிள்ளையைப் பற்றி கவலைப்பட அவசியம் ஏற்படாத வகையில் பிள்ளைப்பராமரிப்புக்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்யவும். ஜெர்மன் மொழி உங்கள் தாய் மொழியாய் இல்லாதிருந்தால் முன்னரே ஒரு மொழிபெயர்ப்பாளரை நீதிமன்றத்தின் வாயிலாக ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்.

## மணமுறிவு பூர்வாங்க வழக்கின் தீர்ப்பிற்கு எதிராக எப்படி செயல்படலாம்?

நீங்கள் மணமுறிவு பூர்வாங்க வழக்கின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாவிட்டால் 10 நாட்களுக்குள் காரணங்கள் எழுதப்பட்ட தீர்ப்பை கேட்கலாம் அல்லது மேல்முறையீட்டினை (தீர்ப்பின் கீழ்ப்பகுதியில் உள்ள மேல்முறையீட்டு உரிமைகளை வாசிக்கவும்) சமர்ப்பிக்கலாம். இந்த 10 நாட்களுக்குப் பின் தீர்ப்பு சட்டபூர்வமான, இறுதியான தீர்மானமாக ஆகும். அதன்பின் சூழ்நிலை மிக்க மாறியிருந்தால் மாத்திரமே நீங்கள் அதில் மாற்றத்தை கேட்கலாம்.

ஒருவேளை நீங்கள் உங்கள் கணவரோடு திரும்ப வாழத்தொடங்கினால், இத்தீர்ப்பு சுமார் 3 முதல் 5 வாரங்களில் தானாகவே செல்லாததாகிவிடும்.

## இவற்றை விட மணமுறிவினை உடனே நாடுவது நலமானதா?

இருவரும் ஏற்றுக்கொண்டு பிராந்திய நீதிமனறத்தில் பிரிவிற்கு ஒப்புதல் அளிக்கும்பட்சத்தில் மணமுறிவு எப்போது வேண்டுமானாலும் சாத்தியமே. இருப்பினும் அனுபவரீதியாக பார்க்கும்பொழுது பெரும்பாலான பிரிவு ஒப்புதல்கள் திரும்பப் பெறப்படுகின்றன. ஆகவே மணமுறிவு பூர்வாங்க வழக்கை நடைமுறைக்கு கொண்டு வருவதே தாபரிப்பு பணம், வீட்டுப் பங்கீடு, பிள்ளைகளின் பராமரிப்பு உரிமை இவற்றைத் தீர்மானிக்க விரைவான வழியாகும். கணவன் அல்லது மனைவி மணமுறிவினை விரும்பாவிட்டால் குறிக்கப்பட்ட 2 ஆண்டுகள் பிரிந்திருத்தலுக்கு பிற்பாடு தான் மணமுறிவு சாத்தியமாகும். திருமண வாழ்க்கை தொடர விருப்பமில்லையெனில் ஒருதலைப்பட்சமாக மணமுறிவு வழக்குத் தொடர இயலும், ஆனால் இது அடைவதற்கு கடினமானது. மணமுறிவிற்கான காரணங்களை ஒரு தரப்பு ஏற்றுக் கொள்ளாவிட்டால் வழக்கு நீடிக்கும். இது குறித்த தகவல்களை ஆலோசனை மையத்தில், வழக்கறிஞரிடம் அல்லது நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்.

## நான் மணம் செய்து கொள்ள நிர்பந்திக்கப் பட்டேன். நான் என்ன செய்வது?

இத்தேசத்தில் வாழும் அனைவருக்கும் கணவன் அல்லது மனைவியை சுதந்திரமாக தெரிவு செய்யும் உரிமை உள்ளது. சுவிச்சர்லாந்து சட்டத்தின்படி இத்தேசத்தில் அல்லது வெளிநாட்டில் நடைபெறும் கட்டாயத் திருமணம் தடை செய்யப்பட்டுள்ளது. இது குறித்து அறிந்துக்கொள்ள www.zwangsheirat.ch என்ற இணையப்பக்கத்தைப் படியுங்கள், அல்லது எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். பல மொழிகளில் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை அளிக்கப்படும்.

## பதிவு செய்யப்பட்ட, திருமணமல்லாத ஒரு உறவினை எவ்வாறு கலைக்க இயலும்?

ஒரு பாலினர்கள் (பெண்-பெண் அல்லது ஆண்-ஆண்) உறவினை பதிவு செய்யலாம். அதனுடாக அவர்கள் திருமணம் சார்ந்த உரிமை மற்றும் கடமைகள் கூடிய ஒரு உறவினை உருவாக்கலாம். நீங்கள் உங்கள் துணைவியின் வாயிலாக வன்முறைக்கு ஆளானால் அல்லது அச்சுறுத்தப்பட்டால், காவலர் மூலம் சட்டத்தின்படி உங்கள் பாதுகாப்பிற்கான நடைவடிக்கை எடுக்க முடியும். நீங்கள் நீதிமன்றத்திற்கு சென்று பிரிவை நடைமுறைக்கு கொண்டு வரலாம் ( வன்முறை பாதுகாப்பு சட்டக் கையேடு ‘). நீங்கள் வசிக்கும் இடத்திலுள்ள நீதிமன்றம் இதற்கு பொறுப்பாய் இருக்கிறது.

இச்சட்ட நடவடிக்கை, திருமண நடவடிக்கையிலுள்ள அதே விடயங்களை ஒழுங்குபடுத்தும். நீங்களும் உங்கள் துணைவரும் பிரிவு குறித்து ஒருமித்த ஒரு முடிவை எடுக்க முடியாவிட்டால், சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட திருமணமல்லாத ஒரு உறவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள ஒரு வருடம் பிரிந்திருக்க வேண்டும் (திருமணமானவர்களுக்கு 2 வருடம்). (பதிவு செய்யப்பட்ட, திருமணமல்லாத உறவின் முறிவு குறித்த துண்டுப்பிரசுரம்).

நாங்கள் பதிவு செய்யப்படாத, திருமணமல்லாத ஒரு உறவினில் வாழ்கின்றோம். இதிலிருந்து பிரிய விரும்புகின்றோம்.

இது சட்டப்பூர்வமாக பிணைக்கப் படாத ஒரு உறவாகும். இவ்வுறவு பிரியும் பொழுது பல நீதித்துறை வழக்குகள் நடக்கும் என முக்கியமாக அறிந்து கொள்ள வேண்டும்: இருவருக்கும் பிறந்த பிள்ளைக்கான பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு உரிமை வழக்கானது பிள்ளைகள் மற்றும் பெரியவர்களின் பாதுகாப்பு ஆணையத்தில் (kesb Zürich) நடக்கும். பிள்ளைக்கான பராமரிப்புப்பணம் பிராந்திய நீதிமன்றத்தால் கணக்கிடப்படும் (BG Kt. Zürich). பிள்ளைக்கான பராமரிப்பு உரிமையைப் பெற்றவர் பிரிவின் பிற்ப்பாடு தாபரிப்பு பணம் பெற்றுக் கொள்ள முடியாது. வீட்டில் யார் இருப்பது என்பது வாடகை ஒப்பந்தம், வீட்டை வாடகைக்கு கொடுத்தவரின் மற்றும் முன்னாள் துணைவரின் ஒத்துழைப்பு ஆகியவற்றைச் சார்ந்ததாகும். பதிவு செய்யப்படாத திருமணமல்லாத ஒரு உறவினின்று பிரிவது சட்டப்படி மிக சிக்கலான காரியமாய் இருக்கின்றபடியால் இவ்விஷயத்தில் வழக்கறிஞரிடம் அல்லது ஆலோசனை மையத்தில் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுங்கள். நீங்களோ உங்கள் பிள்ளைகளோ உங்கள் துணைவரின் வாயிலாக வன்முறைக்கு ஆளானால் அல்லது அச்சுறுத்தப்பட்டால், சட்டத்தின்படி உங்கள் பாதுகாப்பிற்கான நடைவடிக்கை எடுக்க முடியும். (வன்முறை பாதுகாப்பு சட்டக் கையேடு).

முக்கியமான முகவரிகள்:
மணமுறிவு பூர்வாங்க வழக்கை நடைமுறைக்கு கொண்டு வருதல்:
www.gerichte-zh.ch
படிவம்: மணமுறிவு பூர்வாங்க வழக்கு

அவசர மருத்துவ அறிக்கைகளை பெற்றுக்கொள்ள:
www.permanence.ch
தொலைபேசி: 044 215 44 44

வழக்கறிஞர்கள் / வழக்கறிஞர் சங்கம்:
www.zav.ch
www.anwaltskollektiv.ch
www.djs-jds.ch

பாதுகாப்பு:
காவலர் அவசர தொடர்பு எண் 117
பெண்களுக்கான வீடுகள்:
www.frauenhaus-schweiz.ch

பெண்களுக்கான ஆலோசனை மையம்:
www.bif-frauenberatung.ch
www.frauennottelefon.ch
www.frauenberatung.ch

பிள்ளைகளுக்கு ஆதரவு:
www.kokon-zh.ch

**BIF** பதிப்பு

© வெளியீட்டாளர்: BIF Beratungsstelle für Frauen
gegen Gewalt in Ehe und Partnerschaft
Postfach 9664, 8036 Zürich
Tel. 044 278 99 99
info@bif.ch
www.bif-frauenberatung.ch
PC 87-137016-4
**IBAN: CH32 0900 0000 8713 7016 4**

ஜெர்மன் மொழி திருத்தம்: Karin Ernst
சட்ட ஆலோசனை: Brigit Rösli
வடிவமைப்பு: artischock.net
மொழிபெயர்ப்பு: weiss traductions genossenschaft

